DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.172/2025**

Deposition of witness for Prosecution அ.சா. 1

| | | |
|---|---|---|
| பெயர் | : | ரஞ்சித் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | சுப்பிரமணியன் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 06.02.2026

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிகிறேன். நான் கடந்த 26.01.2025 ம் தேதி தேவகோட்டை தாலுகா காவல் நிலைய காவல் சார்பு ஆய்வாளர் திரு.கே.ஜெயபாலன் என்பவருடன் நானும் முதல் நிலை காவலர் 695 திரு.ராஜேஷ் அவர்களும் கண்ணங்குடி பகுதியில் மதுவிலக்கு மற்றும் குற்ற தடுப்பு அலுவலாக சுற்றவரும்போது கண்ணங்குடி ஊரணி அருகே மது விற்பனை செய்வதாக கிடைத்த இரகசிய தகவலின்பேரில் காலை 7 மணிக்கு அங்கு சென்று கண்காணித்தபோது சந்தேகத்தின்பேரில் TN 63 CZ 9056 Suziki aces என்ற இரு சக்கர வாகனத்தில் நின்று கொண்டிருந்தவர் எங்களை கண்டதும் ஒட எத்தனித்தவரை பிடித்து விசாரணை செய்ததில் அவர் தன் பெயர் வைரவசுந்தரம் என்றும்,வயது 61, த.பெ.சாத்தையா, தேவகோட்டை தாலுகா, கண்ணங்குடி கிராமம் என்று தனது விலாசத்தை தெரிவித்தார். பின்பு அவரது இரு சக்கர வாகனத்தை சோதனை செய்தபோது உட்காரும் சீட்டுக்கு அடியில் உள்ள

பெட்டியில் சாக்குபையில் 180 மில்லி அளவு கொண்ட மென்ஸ்கிளப் பிராண்டி 29 பாட்டில்களும், 180 மில்லி அளவு உள்ள Honeybi பிராண்டி 6 பாட்டில்களும் இருந்தது. மேலும் பாட்டில் மூடி திறந்து மூடிய நிலையில் 180 மில்லி அளவுள்ள mensclub பிராண்டி 2 பாட்டில்கள் இருந்தது. அதைப்பற்றி விசாரிக்க அவர் வழக்கமாக அரசு மதுபான கடையில் மது வாங்கி அரசு எந்த அனுமதியின்றி அதிக லாபத்திற்கு விற்பனை செய்வதற்காக விற்று சுயலாபம் கருதி வைத்திருந்ததாக கூறி ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். என்னிடம் காண்பிக்கப்டும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1ம் கையொப்பம் என்னுடையதுதான். (**மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1ம் கையொப்பம் அ.சாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) மேலும் அவர் வைத்திருந்த சொத்துக்களை கைப்பற்ற தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வரதாத நிலையில் 8.15 மணிக்கு காவல் சார்பு ஆய்வாளர் அவர்கள் அத்தாட்சி தயார் செய்து மது பாட்டில்களை கைப்பற்றினார். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1ம்-கையொப்பம் என்னுடையதுதான். (**மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1ம் கையொப்பம் அ.சாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்பு வைரவசுந்தரம் அவர்களை தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் ஆஜர் ஆக சொல்லி அறிவிப்பு கொடுத்து காலை 9 மணிக்கு காவல் நிலையம் வந்தோம். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

3 பேரும் ஒரே காரில் சம்பவம் இடம் சென்றோம். 3 பேருமே சீருடை அணியாமல் இருந்தோம். கண்ணங்குடி கிராமத்தில் மொத்தம் 6 ஊரணி உள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. கைப்பற்றுதல் மகஜரில் விபரங்கள் நிரப்பியுள்ள கையெழுத்து யாருடையது என்றால் சார்பு ஆய்வாளருடையது. கைப்பற்றுதல் மகஜரை சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்தோம். காவல் நிலையம் வந்தபிறகுதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய முடியும் என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் குற்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தை சார்பு ஆய்வாளர்தான் தயார் செய்தார். ஒப்புதல் வாக்குமூலத்தில் சம்பவ இடத்தில் வைத்தே கையெழுத்து போட்டேன். ஒப்புதல் வாக்குமூலத்தை சார்பு ஆய்வாளர்தான் எழுதினார். எழுதி சொல்ல சொல்ல சார்பு ஆய்வாளர் எழுதிக்கொண்டாரா என்றால் ஆமாம். நாங்கள் போகும்போது என்ன என்ன பொருட்கள் எடுத்துச்சென்றோம் என்றால் எங்களுடைய அடையாள அட்டை, அத்தாட்சி மற்றும் A4 பேப்பர்கள் எடுத்துச் சென்றோம். ஒப்புதல் வாக்குமூலம்

எழுதப்படவில்லை என்றும், கணினியால் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால், சம்பவ இடத்தில் ஒப்புதல் வாக்குமூலம் எழுதப்பட்டது அதன்பிறகு தட்டச்சு செய்யப்பட்டிருக்கலாம் எனக்கு தெரியாது. எந்த ஊரணி, எந்த திசையில் சம்பவ இடம் உள்ளது என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் முடியாது. பொதுவாக சுதந்திர தினம் மற்றும் குடியரசு தினம் போன்ற நாட்களில் மதுவழக்குகள் பதிவு செய்யப்பட் வேண்டும் என்ற வழிகாட்டுதல் எங்களுக்கு உள்ளது என்றால் சரிதான். அதற்காகதான் எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகஜர் போன்றவை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரியை யார் எப்போது எங்கு வைத்து கைது செய்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சார்பு ஆய்வாளர் கைது செய்தார், எங்கு எப்போது என்று தெரியாது. சம்பவ இடத்தில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்திருந்தால் குற்ற எண் குறிப்பிட்டிருக்க மாட்டோம் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.